**IN THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

**M.C.O.P No. 390/2013 29.06.2022**

**ம.சா. 1 குமார்**

**ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

இந்த வழக்கின் விபத்து என்றைய தேதியில் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் நடந்தது என்றால் 30.04.2013 என்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை, விடியற்காலை 03.00 மணிக்கு பெங்களூரிலிருந்து ஒசூர் செல்லும் வழியில் அத்திப்பள்ளி அருகில் Classic Hotel எதிரில் இந்த விபத்து நடைபெற்றது. நான் எந்த வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் TN 47 X 9429 என்ற டிப்பர் லாரியை ஓட்டி சென்று கொண்டிருந்தேன். வீபத்து எப்படி நடந்தது என்றால் எனக்கு முன்னாடி சென்று கொண்டிருந்த லாரியை Sales Tax Check Post- ல் நிறுத்த சொன்ன போது அந்த லாரி ஓட்டுநர் தீடீரென்று பிரேக் போட்டதால் அந்த வண்டி கட்டுப்பாட்டை இழந்து பின்னால் வந்த என்னுடைய லாரியின் மீது மோதி விட்டது. நான் சொல்வது போல் Classic Hotel எதிரே எந்த செக்போஸ்ட்டும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அப்போது Sale Tax Check Post இருந்தது, ஜி.எஸ்.டி வந்த பிறகு தான் அந்த செக்போஸ்ட்டை எடுத்து விட்டனர். நான் தாக்கல் செய்த மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி Sale Tax Check Post இருந்த விவரத்தையும் அவர்கள் நிறுத்த சொன்ன விவரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, தவறுதலாக வேண்டுமானால் விட்டு போய் இருக்கலாம். முன்னால் சென்ற வாகனம் கவனமாகவும் மெதுவாகவும் சென்று கொண்டிருந்தபோது நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் என் வண்டியை ஓட்டி வந்து முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தூக்க கலக்கத்தில் அதிகாலையில் வண்டியை ஓட்டி வந்தது இந்த விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எதிராகத்தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான், தவறாக அந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் ஆனேக்கல் நீதிமன்றத்தில் அபராதம் கட்டியுள்ளேனா என்றால் ஆமாம். என் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை எ.ம.சா.ஆ.1. என்னுடைய அஜாக்கிரதையின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதன் காரணமாகத்தான் தான் எனக்கு எதிராக இந்த முதல் தகவல் அறிக்கையும், குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல, விபத்து நடந்து இரண்டு நாட்கள் நான் கண் முழிக்கவே இல்லை, விபத்து நடந்து பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் மயக்கமாக நினைவில்லாமல் இருந்த விசயத்தை என்னுடைய மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன், மருத்துவமனையில் இருந்தபோது கூறியுள்ளேன். இந்த விபத்தானது 09.04.2013-ல் நடந்தது என்றால் சரிதான். நான்

மருத்துவமனையிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து Discharge ஆகி சென்றேன் என்றால் ஒரு வாரம் மருத்துவமனையில் இருந்தேன். எந்த மருத்துவமனயில் சிகிச்சை பெற்றேன் என்றால் முதலில் பெங்களூர் ரோட்டில் உள்ள பிளோசம் மருத்துவமனையில் முதலில் சிகிச்சை எடுத்தேன், பிறகு ஒசூரில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன், பெயர் தற்போது ஞாபகம் இல்லை. நான் பிளோசம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறுகிறேன் அந்த மருதுவமனையில் 09.04.2013 அன்று சேர்ந்து அன்றைய தினமே மருத்துவமனையிலிருந்து விடுவிக்கபட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அந்த ஆவணத்தில் தவறாக எழுதி விட்டார்கள், அங்கு சில நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளேன், என் கண் முழுவதும் கண்ணாடி துகள்கள் ஒட்டி கொண்டிருந்தது. நான் தாக்கல் செய்த Discharge summary-யில் எனக்கு குணமாகிவிட்டதாகவும் நல்ல நிலையில் இருப்பதாகவும் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல, என்னுடைய இடது கை ஆள்காட்டி விரல் துண்டாகி இருந்தது, மருத்துவமனையின் சிகிச்சையில் தான் அதை ஒன்றாக்கினார்கள், இரண்டு கால்களிலும் முட்டிக்கு அருகில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் காலில் அடிப்பட்ட விவரத்தை கூறவில்லை என்று சொன்னால் வழக்கு போடும் போது அதற்கான விவரங்களை என் தந்தை தான் கொடுத்தார், அவர் என்ன விவரங்களை கொடுத்தார் என்று தற்போது எனக்கு தெரியவில்லை, தற்போது என் தந்தையும் காலமாகிவிட்டார். 31.03.2022 அன்று நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி சங்கதிகளை நான் கூறவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான், நான் நடந்த உண்மையை சொல்லகிறேன். நான் முன்னால் சென்ற லாரியின் மீது தான் தவறு என்று கூறுகின்ற நிலையில் என் மீது வழக்கு பதிவு செய்துள்ளதால் நான் அது தவறு என்று கூறி முன்னால் சென்ற லாரிக்கு எதிராக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. முன்னால் சென்ற லாரியின் மீது தவறு என்றால் நான் அவருக்கு எதிராக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் என் மீது தவறு இருக்கின்ற காரணத்தினால் தான் நான் அவருக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முன்னால் சென்ற வாகனத்திற்கும் என்னுடைய வாகனத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 20 அடி இருக்கும். ஓட்டுநர் விதிகளின் படி இரண்டு வாகனத்திற்கும் இடையே உள்ள தொலைவு சுமார் 30 மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் மோட்டார் வாகன விதிகளை கடைபிடிக்காத காரணத்தினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விதிகளின் படி நடந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையின் காரணமாகத்தான் நடந்தது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமாக நான் முன்புபோல் நன்றாக வேலை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, என்னால் தற்போது வேலை செய்யமுடியவில்லை. விபத்து சமயத்தில் என்னுடன் வேறு யாரு பயணம் செய்தார் என்றால் என் தந்தை தான் பயணம் செய்தார், அவருக்கு எந்த அடியும் படவில்லை. விபத்து சமயத்தில்

என்னுடைய வாகனத்தில் ஜெயராமன் என்ற நபரும் பயணம் செய்தார் என்றாலும் அவருக்கும்ட இந்த விபத்தில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த லாரியின் ஓட்டுநர் ஜெயராமன் என்றாலும் நான் அந்த வண்டியில் கிளினராக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் என் தந்தை. என் தந்தையும் விபத்து சமயத்தில் என்னுடைய வாகனத்தில் பயணம் செய்ததாக என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என் தந்தை நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் என்றாலும் நான் அதில் சும்மா தான் பயணம் செய்து விட்டு மாதம் ரூ.20 ஆயிரம் கிளினராக அந்த வாகனத்தில் உரிமையாளரிடம் பணிபுரிவதாக நான் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல, நான் குடும்ப தொழில் பங்கெடுத்ததால் அதற்கு எனக்கு சம்பளம் கொடுத்தார்கள். என் தந்தையிடமே வேலை பார்த்து சம்பளம் வாங்குவதாக நான் என் மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டுனராக வேலை பார்த்து மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதித்ததற்கு ஆதாராமாக ஆவணம் எதுவம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்து ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ் என் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த காயச்சான்றிதழில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அவர்கள் வழங்கிய கருத்துரை சாதாரண காயங்கள் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபத்தில் சாதாராண காயம் தான் ஏற்பட்டது என்றாலும் கொடுங்காயம் எதுவம் எற்படவில்லை என்றாலும் இழப்பீடு வாங்கவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்தற்கு ஆதாராமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவிலல்ல என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்து இருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாத காரணத்தினால் நான் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளில் குறிப்பிட்டுள்ள அளவு நான் பணம் செலவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அதை விட அதிகமாக செலவு செய்துள்ளேன். இந்த விபத்தானது முழுக்க முழுக்க என்னுடைய அஜாக்கிரதையின் காரணமாக ஏற்பட்டதினால் இரண்டாம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டியது இல்லை என்றாலும் எனக்கு எதாவது இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களிடமிருந்து தான் பெற முடியும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிலல்ல என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் ஓட்டி வந்த வாகனம் TATA AIG காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்தே இழப்பீடு கேட்க முடியாது

என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வாகனத்தை பொறுத்து 3ம் தரப்பினர் இல்லை என்ற காரணத்தினால் 4ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் இழப்பீடு கேட்க வேண்டும் என்றால் என்னை பொறுத்து 3ம் தரப்பினரான 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்களிடம் தான் கேட்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவானது சட்டப்பிரிவு 166-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சட்டப்பிரிவு 166-ன் கீழ் 3ம் தரப்பினர் மட்டுமே இழப்பீடு கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. 3ம் தரப்பினர் இல்லாத காரணத்தினால் 4ம் எதிர்மனுதாாரிடம் இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

E SASIKALA

Principal Subordinate Judge,
Digitally signed by E SASIKALA
Location: Hosur
Date: 2022.06.29 18:35:20 +0530